# TAMIL NADU
# GOVERNMENT GAZETTE

PUBLISHED BY AUTHORITY

**No.29] CHENNAI WEDNESDAY, JULY 23,2008**

**Aadi 8, Thiruvalluvar Aandu-2039**


## Part VI --- Section 2

(Supplement)

**NOTIFICATIONS BY HEADS OF DEPARTMENTS, ETC.**

# தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையம்

**எண்.17, மூன்றாவது பிரதான சாலை, சீத்தம்மாள் காலனி, ஆழ்வார்பேட்டை, சென்னை-18.**

அறிவிக்கை எண். த.மி.ஒ.ஆ./ஒழுங்குமுறை விதிகள்/F&F/4/2-3, 17.06.08 நாளிட்டது:

---

தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையம், 2003ஆம் ஆண்டு மின்சாரச்சட்டத்தின் (மத்தியச்சட்டம் 36/2003) 50ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் (g) கூறின்படி தனக்கு வழங்கப்பட்ட தன்னுடைய அதிகாரங்களைச் செலுத்தி, 2004 ஆம் ஆண்டு தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையக்கட்டணங்கள் மற்றும் அபராதங்கள் ஒழுங்குமுறை விதிகளை, 2004 பிப்ரவரி 18–ம் நாளிட்ட தமிழ்நாடு அரசிதழில் குறித்துரைத்துள்ளது மற்றும் அறிவிக்கை செய்துள்ளது என்பதாலும்,

மற்றும் முன்னதாக ஒருசில அலுவற்பணிகள் குறித்துத் தெளிவாகக் கூறப்படாதவை பொறுத்து, கட்டணங்கள் வசூலிப்பதற்கு வகை செய்வது தொடர்பான ஒருசில இடர்ப்பாடுகளை நீக்கும் பொருட்டு, மேற்சொன்ன ஒழுங்குமுறை விதிகளுக்கு திருத்தங்கள் பிறப்பிப்பது அவசியமெனக் கருதுவதாலும் மற்றும் அவற்றின் முந்தைய வெளியீடு ஏற்றுக்கொள்ளப்பட்டிருப்பதாலும்,

இப்போது, அதற்காக, 2003 ஆம் ஆண்டு மின்சாரச் சட்டத்தின் 86 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் (g) கூறின் மூலம் தனக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களையும் மற்றும் இதன்பொருட்டு அதனை இயல்விக்கும் பிற அதிகாரங்கள் அனைத்தையும் செலுத்தி தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையம், (இதில் இதன்பின்பு முதன்மை ஒழுங்குமுறை விதிகள் என்று குறிப்பிடப்படும்) 2004 ஆம் ஆண்டு தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையக்கட்டணங்கள் மற்றும் அபராதங்கள் ஒழுங்குமுறை விதிகளில் பின்வரும் திருத்தங்களைச் செய்கிறது :-

2008 ஆம் ஆண்டு தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையக் கட்டணங்கள் மற்றும் அபராதங்கள் (இரண்டாம் திருத்தம்) ஒழுங்குமுறைவிதிகள்.

1. <u>குறுந்தலைப்பு மற்றும் தொடக்கம்:</u>

i) இந்த ஒழுங்குமுறைவிதிகள், 2008 ஆம் ஆண்டு தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையக் கட்டணங்கள் மற்றும் அபராதங்கள் (இரண்டாம் திருத்தம்) ஒழுங்குமுறைவிதிகள் என்று வழங்கப்பெறும்.

ii) இவை தமிழ்நாடு அரசிதழில் வெளியிடப்பட்ட தேதியிலிருந்து நடைமுறைக்கு வரும்.

2. <u>முதன்மை ஒழுங்குமுறை விதிகளின் 6 ஆம் ஒழுங்குமுறை விதியின் திருத்தம்:</u>

முதன்மை ஒழுங்குமுறை விதியின் 6 ஆம் ஒழுங்குமுறை விதியின் கீழுள்ள அட்டவணையில்,

i) 4 ஆம் இனம் மற்றும் அது தொடர்பான பதிவுகளுக்குப் பின்பு, பின்வரும் குறிப்பு புகுத்தப்படுதல் வேண்டும், அதாவது –

<u>குறிப்பு:–</u> ஆணையம் மின்கொள்முதல் இசைவுப்பத்திரத்திற்கு ஒப்புதல் அளிக்க மறுக்கிற நேர்வுகளில், மேற்சொன்ன விண்ணப்பம் தாக்கல் செய்யப்படும் நேரத்தில், செலுத்தப்பட்ட கட்டணங்கள், மேற்சொன்ன மனு அல்லது விண்ணப்பத்தின்மீது நடவடிக்கை எடுக்கையில் ஆணையத்தினால் செய்ய நேர்ந்த நியாயமான செலவுகளைக் கழித்தபின்பு திருப்பிச் செலுத்தப்படுதல் வேண்டும். அவ்வாறு கழிக்கப்படவேண்டிய தொகையை ஆணையம் முடிவு செய்யும்.

ii) 6 ஆம் இனம் மற்றும் அதுதொடர்பான பதிவுகளுக்குப்பதிலாக, பின்வரும் இனங்கள் மற்றும் அவை தொடர்பான பதிவுகள் அமைக்கப்படுதல் வேண்டும், அவையாவன :-

6 (a) பிற பட்டியலிட்ட வகைகளில் உள்ளடங்காத
தனிநபர்களால் தாக்கல் செய்யப்படும் – ரூ. 500/–
பலவகையான விண்ணப்பங்கள்.

(b) 1956 ஆம் ஆண்டு நிறுமங்கள் சட்டத்தின்
(சட்ட எண் 1/1956) படி பதிவு செய்யப்பட்ட – ரூ. 5,000/–
நிறுவனம் அல்லது ஏதேனும் நிறுவகம் அல்லது
பிற கூட்டமைப்பு.

(c) ஆணையத்தின் முன்பு தாக்கல் செய்யப்பட்ட
முதன்மை மனுவிலுள்ள ஏதேனும் இடைநிலை – ரூ. 100/–
விண்ணப்பத்திற்கு

(தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையத்தின் ஆணைப்படி)

இரா. பாலசுப்பிரமணியன்
செயலாளர்